Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 | பாலம்: 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2023

# கனடிய மத்திய அரசிற்கான இடைத்தேர்தல்கள்

கனடாவின் தற்போதைய 44ஆவது நாடாளுமன்றத்திற்கான இடைத்தேர்தல் நான்கு தொகுதிகளில் 2023 ஜுன் 19ஆம் திகதி நடைபெற்றது. 2022 டிசம்பர் 12ஆம் திகதி ஓர் இடைத்தேர்தல் நடைபெற்றது. 2023 ஜுலை 24ஆம் திகதி இன்னொரு இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

Winnipeg South Centre தொகுதியைச் சேர்ந்த லிபரல் கட்சி உறுப்பினராக இருந்த Jim Carr 71 வயதில் நோய்வாய்பட்டு 2022 டிசம்பர் 12இல் காலமானார். இவர் இத்தொகுதி உறுப்பினராக 2015 ஆம் ஆண்டில் இருந்து பதவி வகித்தார். இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 2023 ஜுன் 19ஆம் திகதி நடைபெற்றது. இவ் இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் Jim Carrஇனுடைய மகன் Ben Carr வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இத்தொகுதியில் பழமைவாதக் கட்சியின் சார்பில் Damir Stipanovic உம், புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Juilia Riddellஉம் போட்டியிட்டனர். பசுமைக் கட்சியின் சார்பில் Doug Hemmerlingஉம், மக்கள் கட்சியின் சார்பில் Tylor Baerஉம் போட்டியிட்டனர். இத்தொகுதியில் இவர்கள் ஐவர் உட்பட 48 பேர் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகளின்படி லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட Ben Carr 56% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இந்த இடைத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற 70 ஆயிரம் வாக்காளர்களில் 37%ஆனோர் வாக்களித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| லிபரல் கட்சி | Ben Carr | 56% |
| பழமைவாதக்கட்சி | Demir Stipanovic | 24% |
| புதிய ஜனநாயகக்கட்சி | Julia Riddell | 15% |
| பசுமைக்கட்சி | Dough Hemmerling | 3% |
| மக்கள் கட்சி | Tylor Baer | 1% |


Ben Carr - Liberal - Winnipeg South Centre

ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள Oxford தொகுதியைச் சேர்ந்த பழமைவாதக்கட்சி உறுப்பினராக இருந்த Dave Mackenzie 76 வயதில் 2023 ஜனவரி 28இல் இளைப்பாறினார். இவர் இத்தொகுதி உறுப்பினராக 2004ஆம் ஆண்டில் இருந்து பதவி வகித்தார். இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 2023 ஜுன் 19ஆம் திகதி நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலில் பழமைவாதக்கட்சியின் சார்பில் Arpan Khanna வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவருடன் பழமைவாதக்கட்சியின் வேட்பாளர் தெரிவிற்கு Dave Mackenzieஇனுடைய மகள் Dab Taitஉம் போட்டியிட்டிருந்தார். Arpan Khanna பழமைவாதக்கட்சியின் சார்பில் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் Brampton North தொகுதியில் போட்டியிட்டு இரண்டாம் இடத்திற்கு வந்தவர்.

பழமைவாதக்கட்சி வேட்பாளர் தெரிவு முறைப்படி நடைபெறவில்லை எனக் கூறி முன்னாள் பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Dave Mackenzie இந்த இடைத்தேர்தலில் போட்டியிடும் லிபரல் கட்சியின் வேட்பாளருக்கே தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார். லிபரல் கட்சியின் சார்பில் David Hiderleyஉம் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Cody Groatஉம் போட்டியிட்டனர். பசுமைக்கட்சியின் சார்பில் Cheryle Bakerஉம் மக்கள் கட்சியின் சார்பில் Wendy Martinஉம் போட்டியிட்டனர். இத்தொகுதியில் இவர்கள் ஐவர் உட்பட 7பேர் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகளின்படி பழமைவாதக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு Arpan Khanna 43% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். பஞ்சாபி, இந்தி மற்றும் உருது மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய Arpan ஒன்ராறியோவில் குடிவரவுத் துறையியல் சட்டத்தரணியாகப் பணியாற்றி வருகிறார். இந்த இடைத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற 98 ஆயிரம் வாக்காளர்களில் 40%ஆனோரே வாக்களித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| பழமைவாதக் கட்சி | Arpan Khanna | 43% |
| லிபரல் கட்சி | Davind Hilderley | 36% |
| புதியஜனநாயகக் கட்சி | Cody Groat | 10% |
| கிறிஸ்தவ பாரம்பரியக் கட்சி | John Markus | 4% |
| மக்கள் கட்சி | Wendy Martin | 3% |
| பசுமைக்கட்சி | Cheryle Baker | 2% |


Arpan Khanna – Conservative – Oxford

மனிற்ரோபா மாகாணத்தில் உள்ள Portage - Lisgar தொகுதியைச் சேர்ந்த பழமைவாதக்கட்சி உறுப்பினராக இருந்த Candice Bergen 2023 பெப்ரவரி 28இல் பதவி விலகினார். இவர் 2008ஆம் ஆண்டில் இருந்து இத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். இத்தொகுதிக்கான இடைத்

தொடர்ச்சி 05 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannenhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436



FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc.

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com



MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136

# For All Your Private Mortgage Needs

8T Capital
Mortgage Administration # 13073



AYNGKARAN SIVA
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



JUTHIS KUPER
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# றைற்றானிக் கப்பலால் மீண்டும் உயிரிழப்பா?



குரு அரவிந்தன்

அறிவியல் சார்ந்து உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, றைற்றானிக் விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆவி இப்பொழுதும் அப்பகுதிக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளைப் பழிவாங்குவதாக சிலர் நம்புவதையும், அப்படியான சிந்தனைகள் தவறானவை என்பதை எப்படி அவர்களுக்குப் புரியவைப்பது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இதற்குக் காரணம் சென்ற வாரம் றைற்றானிக் கப்பலை ஆய்வு செய்வதற்காக சென்ற ஐவர் அடங்கிய குழு ஒன்று அவர்கள் சென்ற சிறிய நீர்மூழ்கிக் கப்பல் விபத்தில் சிக்கியதால் மரணமடைந்து விட்டனர்.

சமீபத்தில் நடந்த ஒன்றுகூடல் ஒன்றின் போது, சிலருடன் உரையாடிக் கொண்டிருக்கையில், பல விடயங்களையும் பேசும் போது, இருவர் இந்தக் கருத்தை முன் வைத்து வாதித்தார்கள். தங்கள் உரையாடலுக்குச் சாதகமாக இப்பகுதியில் 1985ஆம் ஆண்டு நடந்த விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களையும் சாட்சியாகக் கொண்டு வந்தனர். அவர்களில் முதியவர் ஒருவர், இது போன்ற மூடநம்பிக்கைகளால் கனடாவில் இருந்து வட அத்திலான்ரிக் சமுத்திரத்தைக் கடந்து அந்தப் பக்கம் போக மாட்டேன் என்று முடிவெடுத்திருப்பதாகச் சொன்னதும் எனக்கு நினைவில் நிற்கிறது.

றைற்றானிக் உல்லாசக் கப்பல் பற்றிப் பலரும் அறிந்திருப்பார்கள். சினிமாப் படங்கள்கூட இந்தப் பெயரில் வெளி வந்தன. ஜேம்ஸ் கமரூனும் 1997ஆம் ஆண்டு றைற்றானிக் என்ற பெயரில் ஒரு படத்தை எடுத்திருந்தார். படம் சிறப்பாக வரவேண்டும் என்பதற்காக, அவர் பல தடவை சிறிய நீர்மூழ்கியில் சென்று றைற்றானிக் மூழ்கிய அந்த இடத்தை நேரடியாகப் பார்த்திருக்கின்றார். றைற்றானிக் கப்பல் புதிதாகக் கட்டப்பட்டு, விபத்தில் சிக்காது என்று உறுதி அளிக்கப்பட்டதால் பல செல்வந்தர்கள் இந்தக் கப்பலின் முதற்பயணத்தில் பங்கு பற்றினர். ஆனால் கனடாவின் நியூ பவுண்லாந்தில் இருந்து சுமார் 435 மைல்கள் தெற்கே வட அத்திலான்ரிக் கரையில் பனிப்பாறையில் மோதியதால் கப்பல் 13,000 அடி ஆழத்தில் 1912ஆம் ஆண்டு மூழ்கிப் போனது. இந்த ஆழத்தில் தண்ணீரின் அழுத்தம் 6,000 psi ஆக இருந்தது. கப்பல் ஒருபோதும் மூழ்காது என்று கப்பல் கட்டியவர்கள் உறுதியளித்ததால், உயிர் தப்புவதற்கு வேண்டிய போதிய பாதுகாப்பு சாதனங்களும் கப்பலில் இருக்கவில்லை.

சென்ற ஞாயிற்றுக்கிழமை யூன் மாதம் 18ஆம் திகதி றைற்றானிக் தேடலுக்காகச் சென்று, விபத்தில் சிக்கிய 'கிராப் ஓஷன்கேற் றைற்றன்' என்ற இந்த சிறிய நீர்மூழ்கிக் கப்பல் புறப்பட்டுச் சென்றபின் சுமார் இரண்டு மணிநேரங்களில் தொடர்பற்றுக் காணாமல் போயிருந்தது. ஒரு மினிவான் அளவு உள்ள இந்த சிறிய நீர்மூழ்கியில் ஆகக்கூடியது ஐவர் மட்டுமே பயணிக்கக்கூடியது. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஆழ்கடல் சுழியோடியான போல் ஹென்றி நர்ஜோலே (Paul-Henri Nargeolec), பிரித்தானிய கோடீஸ்வரரான ஹமிஸ் ஹார்டிங் (Harmish Harding), மற்றும் பிரித்தானியாவில் வாழும் பாகிஸ்தானிய செல்வந்தர்களான சாகடா டாவூட் (Shahzada Dawood), அவரது மகனான 19 வயதான சுல்மான் (Suleman Dawood), மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் ஓட்டியான ஸ்ரொக்ரொன் ரஸ் (Stockton Rush)ஆகியோரே இதில் பயணித்தனர்.

சென்ற வியாழக்கிழமை, 22ஆம் திகதி விபத்தில் சிக்கிய நீர்மூழ்கியின் உடைந்த பாகங்களைத் தேடுதல் நடத்தியவர்கள் ஆழ்கடலில் கண்டு பிடித்தனர். றைற்றானிக் மூழ்கிய இடத்தில் இருந்து சுமார் 1600 அடி தூரத்தில் இதன் உடைந்த பாகங்கள் கண்டு பிடிக்கப் பட்டன. 40 மணி நேரத்திற்கான உயிர்வளி மட்டுமே இதில் எஞ்சி இருந்ததாகத் தெரிகின்றது. பெரிய நீர்மூழ்கிக் கப்பல்கள் தொடர்ந்து ஒரு மாதம்வரை கடலுக்கு அடியில் நடமாடக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கும், ஆனால் இது போன்ற சிறிய நீர்மூழ்கிகள் பத்துப் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் ஆழ்கடலில் தொடர்ந்து நிற்க முடியாது. இந்த விபத்திற்குக் காரணம் 'catastrophic Implosion - loss of the pressure chamber' என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது. இத்தகைய நீர்மூழ்கியில் சின்னதாக ஒரு குறைபாடு இருந்தாலும் நீரின் அழுத்தம் காரணமாக ஆழ்கடலில் வெடித்துச் சிதறிப் போகலாம் என்று இந்த விபத்துப் பற்றி நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

ஓஷன்கேற் என்ற இந்த நிறுவனம் 2021ஆம் ஆண்டில் இருந்து ஆய்வு நோக்கங்களுக்காக இதுவரை 60 பயணிகளை இந்த இடத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றது. 'போலார் பிறின்ஸ்' என்ற தாய்க் கப்பல்தான் றைற்றன் நீழ்மூழ்கியை வழிநடத்தியது. இக்கப்பலுடனான தொடர்புதான் துண்டிக்கப்பட்டது. இந்த துயர சம்பவத்தால், சென்யோன்ஸ் துறைமுகத்திற்கு இந்தத் தாய்க்கப்பல் இன்று திரும்பி வந்திருந்தது.



அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானிய நாட்டுத் தேடுதல் கப்பல்களுடன் கனடாவின் மூன்று கப்பல்களும் தேடுதலில் ஈடுபட்டன. இந்தத் தேடுதலில் 9 கப்பல்கள் நேரடியாக ஈடுபட்டிருந்தன. இதைவிட அமெரிக்க விமானங்களோடு கனடாவின் ரோயல் கனடியன் விமானப் படையைச் சேர்ந்த ஹேர்குலீஸ் சி-130 விமானமும், ஆழ்கடல் பொருட்களைக் கண்டுபிடிக்கும் அரோரா சிபி-140 விமானமும் தேடுதல் நடத்தின. பல நாடுகள் இணைந்து நடத்திய இந்தத் தேடுதலுக்குப் பல கோடி டொலர்கள் செலவாகின. மூழ்கிப்போன நீர்மூழ்கிக் கப்பல் பரீட்சார்த்தமாக பாவனைக்கு விடப் பட்டதே தவிர, பயணிகளின் பாவனைக்கு உரியதாகச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பது இப்போதுதான் தெரிய வந்திருக்கின்றது.

சமீபத்தில் இதுபோன்ற நீர்மூழ்கிக் கப்பல் விபத்து ஒன்று 2020ஆம் ஆண்டு யூலை மாதம் தென் கொரியாவில் நடந்தது. 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தோனேசியாவின் நீர்மூழ்கி ஒன்று ஆழ்கடலில் 2750 அடி ஆழத்தில் மூழ்கியதால் 53 கடற்படையினர் மரணித்தனர். 2021ஆம் ஆண்டு அக்ரோபர் மாதம் அமெரிக்க நீர்மூழ்கி ஒன்று தென் சீனக்கடலில் விபத்துக்கு உள்ளானது. அதிஸ்டவசமாக இதில் யாரும் மரணிக்கவில்லை. 2000ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் ரஸ்யாவின் அணுசக்தியில் இயங்கிய நீர்மூழ்கி ஒன்று விபத்தில் சிக்கியபோது, 118 கடற்படையினர் மரணித்தது நினைவிருக்கலாம். இந்த சம்பவத்தைக் கருப்பொருளாகக் கொண்டு நான் எழுதிய 'நீர்மூழ்கி நீரில்மூழ்கி' என்ற குறுநாவலுக்குத்தான் ஆனந்தவிகடன் பவளவிழாப் போட்டியில் முதல் பரிசு கிடைத்தது. விண்வெளிப் பயணங்கள் போல ஆழ்கடல் பயணங்களும் ஆபத்துக்கள் நிறைந்தவைதான்.




விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



# கனடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தேர்தல் 2023 ஜுன் 19ஆம் திகதி நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலில் பழமைவாதக்கட்சியின் சார்பில் Branden Lesilie வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் Candice Bergenஉடைய தேர்தல் பிரசார முகாமையாளராக இருந்தவர். இந்த இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் Kerry Smithஉம் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் Lisa Tessier - Burchஉம் போட்டியிட்டனர். மக்கள் கட்சியின் சார்பில் அக்கட்சியின் தலைவர் Max Bernier போட்டியிட்டார். பசுமைக் கட்சியின் சார்பில் Nicolas Gedder போட்டியிட்டார். இத்தொகுதியில் இவர்கள் ஐவர் மட்டுமே தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகளின்படி பழமை வாதக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட Branden Lesilie 65% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இந்த இடைத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற 69 ஆயிரம் வாக்காளர்களில் 45%ஆனோரே வாக்களித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| பழமைவாதக்கட்சி | Branden Leslie | 65% |
| மக்கள் கட்சி | Max Bernier | 17% |
| லிபரல் கட்சி | Kerry Smith | 9% |
| புதிய ஜனநாயகக்கட்சி | Lisa Tessier - Burch | 7% |
| பசுமைக்கட்சி | Nicolas Gedder | 2% |



Branden Leslie - Conservative - Portage-Lisgar

குவிபெக் மாகாணத்தில் Notre-Dame-de-Grace - Westmound தொகுதியைச் சேர்ந்த லிபரல் கட்சி உறுப்பினரான Marc Garneau 73 வயதில் 2023 மார்ச் 8ஆம் திகதி இளைப்பாறினார். இவர் 2008ஆம் ஆண்டில் இருந்து இத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 2023 ஜுன் 19ஆம் திகதி நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் Anna Gainey வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பழமைவாதக்கட்சியின் சார்பில் Mathew Kaminskiஉம் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் Jean-Francois Filionஉம் போட்டியிட்டனர். பசுமைக்கட்சியின் சார்பில் Jonathan Pendneaultஉம் மக்கள்கட்சியின் சார்பில் Tiny Olingaவும் போட்டியிட்டனர். மற்றும் இவர்களுடன் புளக் குவிபெக்குவா கட்சியின் சார்பில் Laurence Masseyஉம் போட்டியிட்டார். இத்தொகுதியில் இவர்கள் அறுவருடன் சேர்ந்து 10 பேர் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகளின்படி லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட Anna Gainey 51% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இந்த இடைத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற 73ஆயிரம் வாக்காளர்களில் 30% ஆனோரே வாக்களித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| லிபரல் கட்சி | Anna Gainey | 51% |
| புதிய ஜனநாயகக்கட்சி | Jean-Francois Filion | 14% |
| பழமைவாதக்கட்சி | Mathew Kaminski | 13% |
| பசுமைக்கட்சி | Jonathen Pendneault | 13% |
| புளக் குவிபெக்குவா கட்சி | Laurence Massey | 5% |



Anna Gainey - Liberals - Notre-Dame-de-Grâce-Westmount

Mississauga – Lakeshore தொகுதி லிபரல் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் Sven Spengemann ஐக்கிய நாடுகள் சபையில் பதவி வகிப்பதற்காக 2022 மே 27இல் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 2022 டிசம்பர் 12இல் நடைபெற்றது. அதில் லிபரல் கட்சியைச் சேர்ந்த வேட்பாளராகப் போட்டியிட்ட Charles Sousa நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் 2007ஆம் ஆண்டில் இருந்து 2018ஆம் ஆண்டுவரை ஒன்றாறியோ மாகாண சட்டசபையில் உறுப்பினராக இருந்தார். இவ் இடைத்தேர்தலில் இவருடன் சேர்ந்து 40 பேர் போட்டியிட்டிருந்தனர். Charles Sousa 51% வாக்குகளைப் பெற்று வென்றிருந்தார். இவருக்கு அடுத்த நிலையில் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த Ron Chhinzer 37% வாக்குகளையும் மூன்றாமிடத்தில் புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த Julia Kole 5% வாக்குகளையும் பெற்றிருந்தனர். இவ் இடைத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற 90 ஆயிரம் வாக்காளர்களில் 28%ஆனோரே வாக்களித்திருந்தனர்.

அல்பேட்டா மாகாணத்தில் உள்ள Calgary Heritage தொகுதியைச் சேர்ந்த பழமைவாதக்கட்சி உறுப்பினராக இருந்த Bob Benzen 63 வயதில் 2022 டிசம்பர் 31இல் பதவி விலகினார். இவர் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி தொடர்ந்து பதவிவகித்து வந்தார். இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 2023 ஜுலை 24ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்த இடைத்தேர்தலில் பழமைவாதக்கட்சியின் சார்பில் Shuvaioy Majumdar வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தொகுதி பழமைவாதக்கட்சியின் முன்னாள் தலைவர் Stephen Harperஇனுடைய தொகுதியாகும். Shuvaioy Majumdar, பழமைவாதக்கட்சியின் முன்னாள் தலைவரின் சர்வதேச ஆலோசனை நிறுவனமான Harper & Associatesஇல் இயக்குநராகப் பதவி வகிக்கிறார். இந்த இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் Elliot Weinsteinஉம் பசுமைக்கட்சி சார்பில் Ravenmoon Crocker போட்டியிடுகின்றனர். மக்கள் கட்சியின் சார்பில் Kelly Lorencz போட்டியிடுகிறார். புதிய ஜனநாயகக்கட்சி இதுவரை தனது வேட்பாளரை நியமிக்கவில்லை.

கனடாவின் தற்போதைய 44ஆவது நாடாளு மன்றத்திற்கான மேற்கூறிய ஆறு இடைத்தேர்தல்களை விட தற்போது பழமைவாதக்கட்சியின் முன்னாள் தலைவர் Erin O'Toole தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 2023 ஜுன் 23ஆம் திகதி விலகுவதாக அறிவித்தபடியால் அவரது தொகுதிக்கும் விரைவில் இடைத்தேர்தல் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. Erin O'Toole 2012ஆம் ஆண்டில் இருந்து ஒன்றாறியோ மாகாணத்தில் உள்ள Durham தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தவர்.

இதுவரை நடைபெற்று முடிந்த 44ஆவது நாடாளு மன்றத்திற்கான ஐந்து இடைத்தேர்தல்களிலும் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களே மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்

தேர்தல் காலமிது தேர்ந்தறிந்த கட்சிகட்கே
ஆர்வமுடன் சென்றெவரும் ஆளும் வலிமைசேர்க்கக்
கூர்மையாய்ச் சிந்தித்தே கூறறிவைப் பாவித்தே
நேர்மையுள்ள வேட்பாளர்க்கு நிதானமாய் வாக்களிப்பீர்.

நாட்டினது முன்னேற்றம் நாடாள் தலைவரதே
வாட்டமின்றி அளிக்கின்ற வாக்குத் தானே!
கோட்பாடு கொள்கைகள் கொண்டநற் கட்சிகட்கு
வேட்பாக வாக்களித்தே வெற்றிவாகை சூடிடுவீர்.

நாடெங்கும் தேர்தல்கள் நன்முறையில் நடந்தாலும்
ஊடுருவும் வாக்குகளும் உண்மைக்குப் புறம்புதானே?
நாடென்றும் முன்னேற நற்றலைவர் வரவேண்டும்
வாட்டமின்றி மக்களுமே வாக்களிக்க வேண்டுமே.

நீதிக்காய்ப் போராடும் நேசமுடைக் கனடாவோ
சாதிமத பேதமற்ற சாதனை யாளரிவள்
மோதி மிதிக்காத மேதகு அன்னையின்
தேர்தல் களத்திலே தேசபக்தி காட்டிடுவோம்.

நாடிவந்த எங்களுக்கு நல்வழி காட்டியோரை
தேடியே வாக்களித்துத் தேர்தலில் வெல்லவைக்க
ஓடி ஒழிக்காது ஒருமித்து வாக்களித்தே
தேடிடுவோம் நல்லரசை தேர்தல் மூலமே




கொள்கைக்கு வாக்களித்தே கோடிட்டுக் காட்டிடுவோம்
தெள்ளத் தெளிந்தறிந்தே தேர்தல் களஞ்சென்றே
அள்ளிக் கொடுத்திடுவோம் ஆர்வமுடன் வாக்குகளை
உள்ளத் தெளிவுடனே ஊராளும் வல்லவர்க்கே.

தன்னார்வத் தொண்டர்கள் தாமாக முன்வந்தே
இன்னலுக் கஞ்சாதே இணைந்துகொண்ட கட்சிகட்காய்
உண்மைபேசி வாக்கினை உரிமையுடன் கேட்போர்க்கு
உண்மையுணர்ந்து நாமும் ஊக்கமுடன் வாக்களிப்போம்.

நாட்டினது காப்புக்காய் நாமளிக்கும் வாக்கிதுவே
ஈட்டுசக்தி இதுதானே இதையுணர்ந்த வாக்காளர்
வாட்டமின்றிச் சென்றங்கே வலிமையுள்ள வாக்கிதனைப்
போட்டிடுவீர் பெட்டியுள்ளே பொழுது போகுமுன்னே.

முருகேசு மயில்வாகனன்

# நாமும் நமது இல்லமும் 634




ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969


கனடாவின் பொருளாதாரக் கொள்கை, 101இன் கருதுகோளின்படி தேவைப்பாடு (கேட்போர்) (DEMAND) எண்ணிக்கை விநியோகத்தை (Supply) விட அதிகரிக்கும்போது விலை அதிகரிக்கும். இந்நிலையே இன்று ஒன்ராறியோ, குறிப்பாக ரொறொன்ரோவில் நடைபெற்று வருகின்றது. கோவிட்-19இற்குப் பிற்பாடு ஏற்பட்ட அதீத விலை அதிகரிப்பு மார்ச் 2022இலிருந்து தொடர்ந்து கனடிய மத்திய வங்கி ஏற்படுத்திய வட்டி அதிகரிப்பு (0.25 இலிருந்து 4.75% (06.07.2023)ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது) ஆதன விலை அதிகரிப்பிற்குத் தடுப்பு போட்டிருந்தது.

எனினும் அடுத்து வரும் மூன்று (3) வருடங்களில் 1.45 மில்லியன் புதியவர்களை கனடாவிற்கு மத்திய அரசு கொண்டு வருவதற்காகத் திட்டமிட்டிருப்பதால் மேலதிகமாக 1.5 மில்லியன் புதிய மனை/வீடுகளை 2031இற்குள் நிர்மாணிக்க வேண்டியுள்ளது.

ஒன்ராறியோ அரசின் Bill 23, வேகமாகவும் துரிதமாகவும் ஆதனம் நிர்மானிப்பதற்கு வழிவகைகளை கொடுத்து இருந்த போதிலும் இதனை நிறைவேற்றுவதற்குரிய தொழில்புரியக் கூடியவர்களை கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளது. இதனால் அரசு எதிர்பார்ப்பது போல, போதியளவு ஆதனங்கள் அமைக்க முடியுமா? அத்துடன் ஒவ்வொரு உள்ளூராட்சி, மாநகராட்சி சபைகளும் புதிய ஆதனம் நிர்மாணிப்பதற்குரிய



வரியை அதிகமாக உயர்த்தியுள்ளதால், சிறிய நிர்மாண நிறுவனங்கள் இவற்றை தாக்குபிடிக்குமா? என்பதும் கேள்வியாகின்றது.

இந்த நெருக்கடியை போக்க அரசினால், இலாப நோக்கமற்ற ஆதனங்கள் கட்ட வேண்டிய நிலைமை உள்ளது. இவை எவ்வாறு சாத்தியமாகலாம்?

கனடா போன்ற நாடுகளில் அரசின் கீழ் தொழில்புரிபவர்களின் மனப்பான்மை வித்தியாசமானது. அரசின் புதிதாக நிர்மாணம் செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட கொள்கைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படலாம் என்பது இயற்கையானதே?

அரச ஊழியர்களால் காலம் தாழ்த்தப்படுவதால், இன்றைய அதிக வட்டிவீத சூழலில் நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் தொழிலிலிருந்து விலக வேண்டிய நிலைமையே ஏற்படும். கனடா மற்றைய 38 வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, நிர்மாணம் செய்வதற்கான சகல அனுமதிகளும் (Permits) பெற்றுக் கொள்ள கனடாவில் அதிக நாட்கள் எடுக்கின்றது என்பது வருந்தக்கூடியது.

ஒன்ராறியோ அரசின் புதிய கொள்கையின்படி அனுமதி பெறும் காலம் குறைந்துள்ளது என்பது நல்ல செய்தி. உதாரணமாக ரொறொன்ரோவை சுற்றியுள்ள பல நகரங்கள் உதாரணமாக மில்ரன் (MILTON), WHITBY, BARRIE,




OAKVILLE மற்றும் BRAMPTON போன்ற உள்ளூராட்சி சபைகள் 16 மாதத்திற்குள் சகல அனுமதிகளையும் கொடுத்துள்ளது. மோசமாக 27 மாதங்கள் எடுத்த நகரங்களாக ரொறொன்ரோ, Caledon, Richmond Hill மற்றும் Vaughan காணப்படுகின்றது.

இதிலுள்ள மிகவும் துக்கமான செய்தி என்ன என்றால், ஒவ்வொரு மாதமும் அனுமதி கிடைக்கப் பிந்தும் காலம் நிர்மாண நிறுவனங்களிற்கு மேலதிக கட்டுமான செலவுகளை ($ 2.60 - $3.30) பெறுமதியால் ஒவ்வொரு சதுர அடிக்கும் அதிகரிக்கும்.

இந்த மேலதிக செலவுகள் வாங்குபவர்கள் மீதே சுமத்த வேண்டிய நிலையில் கட்டும் நிறுவனங்கள் உள்ளன. இதனால் புதிதாக வந்துள்ள செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) முறையை

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




# பாராட்டுதலில் சிக்கனமா?




பாராட்டுதலை புகழ்தல், அன்பு காட்டுதல், பெருமிதம் உரைத்தல், கொண்டாடுதல், மனத்தில் வைத்தல், மேன்மை, புகழ்ந்து பேசுதல் எனப் பொருள்கொள்ளலாம். பாராட்டு (APPRECIATE) என்பது மனிதனின் நற்குணங்களில் ஒன்று. மனிதனுக்கு மட்டுமே உண்டானது. உலகெங்கும் பாராட்டு என்பது நற்பண்பாக உள்ளது. மனிதனுக்கு வேண்டிய முதன்மைக் குணம் பாராட்டும் குணம்தான். பணம் செய்யாததை பாராட்டு செய்யும் என்பது புதுமொழி. இன்றைய வேகமான உலகில் பாராட்டு (PRAISE) என்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சிறந்த அங்கீகாரம் ஆகிறது. அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாராட்டுத்தான் அடிப்படை. நேரம்தான் செல்வம் என்று இயங்குகின்ற உலகில் வார்த்தைகள் குறைந்து பாராட்டும் வார்த்தைகள் மெலிந்துவிட்டன. பாராட்டுக்களில் சிக்கனம் தவிர்க்கப்பட வேண்டும். பாராட்டுதலிலும் சிக்கனமா? வேண்டாம்.

பாராட்டுக்கள் உள்ளுணர்விலிருந்து வர வேண்டும். நல்ல வார்த்தைகளுக்கு நாம் எல்லோரும் ஏங்குகிறோம் என்றால் நம்புவீர்களா? நீங்கள் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் உங்களுக்கு வந்துசேரும் ஒரு சிறிய பாராட்டுக்கூட உங்களை ஒரு நொடியாவது சிறு ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா? குழந்தை வளர்ப்பில் பாருங்கள், குழந்தை வளர்வது உணவைவிட ஆதரவும், பாராட்டும்தான் தொடர்ந்து பிள்ளையை வளர்க்கிறது என்பது உளவியல் ஆய்வாளர்கள்



கருத்து. மொழியறிவு வளரும்வரை வார்த்தைகள் தரும் நம்பிக்கையும், பாராட்டும் தொடுகைமூலமே நிகழ்கிறது. உறவுகள் இயந்திரத்தனமாக இயங்குகையில் தேவைகள் கருதிமட்டும் வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வார்த்தைகளில் பாராட்டைத் தேடவேண்டியுள்ளது.

மனதார ஒருவரை பாராட்டுவது என்பது அரிதான செயலாகிறது. ஒருவர் பாராட்டினாலே இவர் எதற்காக இப்படிப் பாராட்டுகிறார்? இவருக்கு என்ன தேவைப்படுகிறது? என்று சந்தேகப்படுபவர்களும் உள்ளனர். எதையும் எதிர் பார்க்காமல் ஒருவரை மனதாரப் பாராட்டுதல் என்பது பாராட்டுபவரின் மனவளத்தைக் காட்டுகிறது. அது ஒரு பரிமாண வளர்ச்சி. அதனால்த்தான் பலருக்கு மனதாரப் பாராட்டும் மன விசாலம் இருப்பதில்லை. உதாரணமாக, நல்ல சாப்பாடு என்றால் வார்த்தை பேசாமல் மிச்சம் வைக்காமல் சாப்பிடுபவரில் எத்தனைபேர் சமைத்த வரைப் பாராட்டுகின்றனர்? சரியில்லை என்றால் திட்டித் தீர்க்க யோசிப்பதில்லை. இன்னொரு வகை மனிதர்களும் இருக்கின்றனர். அவர்கள் யாரையும் எதுவும் பாராட்டமாட்டார்கள். ஏனெனில், அவர்கள்தான் தலைசிறந்தவர்கள் என்று நினைப்பர். அவர்களிடம்தான் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஒதுங்கிக் கொள்வது நல்லது.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்களின் செயல்களை நிரூபிக்கிறதா? நீங்கள் பாராட்டுவது எதுவானாலும் அதை எளிதில் மற்றவர்கள் பிரதி எடுக்கும்படி இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் உங்களின் பாராட்டுக்கள் உண்மை யானவை, உங்களது சிறந்த பாராட்டு வார்த்தைகளை அவர்களும் பின்பற்றுவர். ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாக இருக்க வேண்டும். ஒன்றுக்கு இருமுறை புகழ்ந்தால் எதையோ எதிர்பார்க்கிறான்




என நினைக்க வாய்ப்புள்ளது. அதிகமாகப் புகழ்ந்தால் நீங்கள் போலித்தனமானவர்கள் என்று அடையாளம் கண்டு கொள்லலாம். பாராட்டு வார்த்தைகள் உங்களின் இதயத்திலிருந்து வந்தால் நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். அவர்கள் வெற்றி பெறுவதற்கு நீங்கள் ஏணியாகிவிட்டீர்கள். பாராட்டு நமது சொந்த மதிப்பு, அவர்கள்மீது நாம் கொண்டுள்ள அக்கறை, மரியாதையை உறுதிப்படுத்தும். எனவே பாராட்டுபவர்கள் யாராக இருந்தாலும் பாராட்டை ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். இது மிகவும் முக்கியம். மற்றவர்களை வெற்றி பெறச்செய்து நாமும் வெற்றி பெற்று விடலாம்.

நல்லவற்றை பாராட்டத் தயங்காதீர்கள். உங்கள் மனதுக்கு பாராட்டத் தோன்றிய உடனே பாராட்டிவிடுவது நல்லது. பாராட்ட வார்த்தைகள் உடனே தெரியவில்லையா? சிறு புன்னகை போதும். நமது சிறு

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



# நானிலம் போற்றும் நட்பு - 23



- அகணி -
authorakani@gmail.com




உங்கள் அனைவருக்கும் இனிய கனடா நாள் வாழ்த்துகள்.

‘விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். (அதிகாரம் பழமை, குறள் 804)’ என்ற குறளிற்கு “உரிமையால் கேளாமலே நண்பர் ஒன்றைச் செய்தால், அந்த உரிமையைப் போற்றி விரும்பும் தன்மையோடு அச்செயலையும் விரும்பி உடன்பட்டிருப்பர் அறிஞர்.” என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“உரிமையோடு தம்மைக் கோளாமல் நண்பர் செய்தனவற்றை உண்மையான நண்பர் ஆவலோடு விரும்பி ஏற்றுக் கொள்வார்” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“நட்பினர், உரிமையுடன், தம்மைக் கேட்காமல் செய்யும் காரியத்தையும் அறிவுடையோர் ஒப்புக் கொள்ளுவர்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.”

தமது அனுமதியின்றி உரிமையுடன் நண்பர் செய்வதை நல்ல நண்பர் ஏற்றுக் கொள்வர் என்ற அறிவுரையை இந்தக் குறள் தந்துள்ளது.

மதுரைக் கூடலூர் கிழார் இயற்றிய ‘முதுமொழிக் காஞ்சி’ என்ற நூலில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களை உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம். முதுமொழி என்பது பழமொழி என்னும் சொற்பொருளோடு தொடர்புடையது. காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் ஒருவகை அணிகலக் கோவையையும் குறிக்கும். பல மணிகள் கோத்த காஞ்சி அணி போல முதுமொழிகள் பல கோத்த நூல் முதுமொழிக் காஞ்சி எனப் பெயர் பெற்றது எனச் சொல்லப்படுகிறது. இந்நூலுள் பத்துப் பத்துக்களும், ஒவ்வொரு பத்திலும் பத்து முதுமொழிகளும் உள்ளன.

முதுமொழிக் காஞ்சி - அறிவுப்பத்து _ பாடல் 3
‘சோரா நல் நட்பு உதவியின் அறிப.’
இதன் பொருள் ‘உதவி செய்யும் தன்மையினால் நல்ல நண்பர்களைப் பெறுவான்’ என்பதாகும்.

சோரா _ நெகிழாத, நல்நட்பு - உயர்ந்த நட்புடைமையை
முதுமொழிக் காஞ்சி - துவ்வாப் பத்து _ பாடல் 7
‘கொண்டு கண்மாறல் கொடுமையின் துவ்வாது’.
இதன் பொருள் ‘பழைய நண்பனுக்கு உதவி செய்யாமல் இருத்தல் கொடுமையானதாகும்’ என்பதாகும்.

கொண்டு - ஒருவனை நட்பு கொண்டு, கொடுமையின் - கொடுமை செய்தலினும்

முதுமொழிக் காஞ்சி - அல்ல பத்து _ பாடல் 3
‘ஈரம் அல்லாதது கிளை நட்பு அன்று’. இதன் பொருள் ‘அன்பில்லாத தொடர்பு உறவுமாகாது நட்புமாகாது’.

ஈரம் அல்லாதது - அன்பில்லாத தொடர்பு, கிளை - சுற்றமும்
முதுமொழிக் காஞ்சி - அல்ல பத்து - பாடல் 5
‘நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்’
இதன் பொருள் ‘மன ஒற்றுமை இல்லாதவன் நண்பனில்லை’
நேரா - ஒற்றுமைப்படாத, நெஞ்சத்தோன் - உள்ளத்தையுடையவன்
முதுமொழிக் காஞ்சி - நல்கூர்ந்த பத்து - பாடல் 3
‘செற்று உடன் உறைவோனைச் சேர்தல் நல்கூர்ந்தன்று’. இதன் பொருள் ‘உள்ளத்தில் பகை கொண்டவனைச் சேர்ந்து வாழ்தல் துன்பத்தைத் தரும்’.

செற்று - உட்பகை கொண்டு, சேர்தல் - நண்பராய்க் கொண்டொழுகுதல்
முதுமொழிக் காஞ்சி - நல்கூர்ந்த பத்து - பாடல் 10
‘நட்பு இல்வழிச் சேறல் நல்கூர்ந்தன்று’. இதன் பொருள் ‘நட்பு இல்லாதவரிடத்து உதவிக்குச் செல்லுதல் துன்பத்தைத் தரும்’.

நட்பு - நட்பியல்பு, இல்வழி - இல்லாவிடத்து, சேறல் - ஓர் உதவியை நாடிப்போதல்
முதுமொழிக் காஞ்சி என்ற நூலில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களைப் பார்த்தோம். கிரேக்கநாட்டின் மிகப்பெரிய தத்துவ அறிஞர் பிதகோரஸ் (Pythagoras) ஆவார். அவர் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர். அறிஞர் பிதகோரஸ் அவர்களும் நட்பிற்கு அரிய கருத்தைக் கூறியவர்.

“நட்பு என்பது இணக்கமான சமத்துவம்” என்பது தத்துவ அறிஞர் பிதகோரஸ் இனது கருத்து. அவரது வாழ்நாளில், அவர் இத்தாலியின் குரோடோனில் பித்தகோரியன் சமூகம் என்று அழைக்கப்படும் ஒரு மத சகோதரத்துவத்தை உருவாக்கினார்.
இப்பொழுது பிதியாஸ், டாமன் பற்றிய ஓர் உண்மைக்கதை பற்றிப் பேசுவோம்.

பிதியாஸ், டாமன் இருவரும் இணை பிரியாத் தோழர்கள். கிரேக்க நாட்டின் தற்போதைய தலைநகரான ஏதென்ஸில் வாழ்ந்தவர்கள். ஒருமுறை அவர்கள் சைரக்யூஸ் (Syracuse) நகருக்கு வந்தனர். அங்கு டயோனிஸியஸ் என்ற கொடுங்கோல் மன்னன் ஆட்சி நடத்தி வந்தான். பிதியாஸ் ஓர் உளவாளி என்று எண்ணி அவனைச் சிறைபிடித்தான். பிதியாஸ் எவ்வளவோ மன்றாடியும் மன்னன் அவனை விடுவதாயில்லை. மரண தண்டனையும் விதித்தான். இதைக் கேட்ட அவனது ஆருயிர்த் தோழன் டாமன் மனம் வெதும்பினான்.

பிதியாஸ், சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால் தொலை தூரத்தில் வாழும் தனது தாயார் உடல் நலம் குன்றி இறந்துவிடும் நிலையிலிருந்ததால் மன்னரிடம் ஒரே ஒரு வேண்டுகோள் மட்டும் விடுத்தான்.



“என்னுடைய மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னர், என் தாயாரை மட்டும் தரிசித்துவிட்டு, விடை பெற்று வருகிறேன், அனுமதி தாருங்கள் நான் ஓடி விடமாட்டேன், கட்டாயம் திரும்பி வருவேன், என்னை நம்புங்கள்” என்று மன்றாடினான்.

கொடுங்கோலன் டயோனிஸஸ் அதை நம்பவில்லை. உன் தாயாரோ தொலைதூர கிராமத்தில் வாழ்கிறாள், உன்னை வெளியே விட்டால், நீ கூண்டுக் கிளியாகப் பறந்து விடுவாய். நீ திரும்பி வருவாய் என்று நம்புவதற்கு நான் முட்டாள் அல்ல. இதற்கு ஒத்துக்கொள்ள முடியாது போ என்று கூறி விட்டான்.

அப்போது அங்கே டாமன் வந்தான். மன்னனே, “பிதியாஸ் என்னுடைய நெருங்கிய நண்பன். அவனுக்கு நான் உத்தரவாதம் தருகிறேன். அவன் சொன்ன நாட்களுக்குள் திரும்பி வராவிடில், நான் மரண தண்டனையை ஏற்கிறேன். அவனை விடுத்து அந்தக் கை விலங்குகளை எனக்குப் பூட்டுங்கள். அவன் வராவிடில் என்னைக் கொல்லுங்கள்” என்றான். மன்னரும் கை விலங்கை மாற்றி பிதியாஸை அனுப்பிவிட்டு டாமனைப் பிடித்து சிறையில் தள்ளினான்.

அம்மாவைப் பார்க்கச் சென்ற பிதியாஸ் வரும் அறிகுறியே இல்லை. நாளையுடன் கெடு முடிகிறது. பிதியாஸ் வராவிட்டால் டாமன் தலை உருளுவது நிச்சயம். ஆனால் டாமன் சிறிதேனும் அஞ்சவில்லை. கெடு முடிவதற்குள் பிதியாஸ் வருவது உறுதி என்று நம்பினான்.

கெடு முடியும் தருவாய். டாமனை மரண தண்டனை மேடைக்கு இட்டுச் சென்றனர். அப்போது வாசலில் ஒரே ஆரவாரம். காவல்காரன் ஓடி வந்து பிதியாஸ், அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருப்பதாக அறிவித்தான். உடனே அவனை “இங்கே அனுப்பு” என்றான் மன்னன்.

பிதியாஸ் மூச்சு இளைக்க இளைக்கப் பேசினான், “மன்னவா என்னை மன்னியுங்கள், என் அருமை நண்பன் டாமனை பெரிய இக்கட்டில் வைத்தது என் தவறே. நான் வரும் வழியில் பருவ மழை கொட்டி கப்பல் திணறிப்போய் தாமதமாகிவிட்டது. டாமனை விடுங்கள். நான் உங்கள் கட்டளைப்படி மரண தண்டனையை ஏற்பேன்” என்றான்.
இதைக்கேட்ட மாத்திரத்தில் கொடுங்கோல் மன்னனின் மகன், மரண தண்டனையை நிறைவேற்றும் வெட்டியான் ஆகியோர் கண்களில் கண்ணீர் பெருகியதாம்.

அரிய நட்பின் பெரிய சின்னம் பிதியாஸ், டாமன் நட்புறவு என்பதை அறிந்த கொடுங்கோல் மன்னன் டயோனிஸஸ், இருவரையும் விடுதலை செய்தான். “நீங்கள் இருவரும் என்னுடனும் நட்பு பாராட்டுங்கள்” என்று மன்னன் இறைஞ்சியதாக அந்தக் கதை உள்ளது.

இவ்வாறாக பல நீதிநூல்களில் நட்பு பற்றிய கருத்துகள் காணப்படுகின்றன. ஒரேவிதமான கருத்துகள் பல நூல்களில் இருப்பினும் எங்கெல்லாம், எத்தகைய நட்பு பற்றிய கருத்துகள் உள்ளன என்பதை அறியும் பொருட்டு பல நூல்களிலும் உள்ள நட்பு பற்றிய கருத்துகள் ஆராயப்பட்டன.

இந்த இதழிலும் நீதி நூல்கள் சிலவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகளையும், நட்பு பற்றிய கிரேக்க உண்மைக் கதை பற்றியும் ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)


# தமிழ்நாட்டு மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்!

**நேர்காணல்: நாராயணன் திருப்பதி　　நேர்கண்டவர்: கண்ணன்**

திமுக அமைச்சர் செந்தில் பாலாஜி கைது, தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலையால் பிராமண சமூகத்தினர் ஒதுக்கப்படுகின்றனர் என்ற நடிகர் எஸ்.வி. சேகர் குற்றச்சாட்டு, தமிழ்நாட்டில் பாஜகவின் வளர்ச்சி, அதிமுக-பாஜக கூட்டணி கட்சித் தலைவர்கள் மோதல், தமிழ்நாடு பாஜகவில் நடக்கும் உள்கட்சி மோதல்கள், 2024இல் நடக்க இருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் என தமிழ்நாடு அரசியலில் இன்று பரபரப்பாக பேசப்படும் பல்வேறு விஷயங்கள் குறித்து, இந்த நேர்காணலில் பதிலளிக்கிறார், தமிழ்நாடு பாஜக துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி. சென்னை மயிலாப்பூரில் சாய்பாபா கோயிலருகே உள்ள அவரது நிறுவனத்தில் இந்த நேர்காணலுக்காக சந்தித்தோம்.

**சமீபத்தில் ‘இந்தியா டுடே’ தொலைக்காட்சியில் நீங்கள் பேசும்போது 2026இல் தமிழ்நாட்டில் பாஜக ஆட்சியமைக்கும் என்றும் கூறினீர்கள். அதன் முன்னால் தமிழ்நாடு வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ‘25 இடங்களில் வெல்வோம்’ என்று கூறிச் சென்றிருக்கிறார். அப்படி ஓர் அரசியல் மாற்றம் தமிழ்நாட்டில் தெரிகிறதா?**

திமுக, 2014 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஓர் இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. ஆனால், 2019இல் ஓர் இடம் தவிர மற்ற எல்லா இடங்களிலும்



வென்றனர். இதுதான் அரசியல் விளையாட்டு, அரசியல் மாற்றம். இது ஒவ்வொரு தேர்தலிலும் நடைபெறுவது தான். வரும் தேர்தலிலும் அது நடக்கும். தமிழ்நாட்டில் அதற்கான சூழ்நிலை வந்து விட்டது. தனது தொகுதிப் பிரச்சினைகளை பலமுறை வலியுறுத்தியும் தமிழக அரசு நிறைவேற்றுவதில்லை என்பதால் ராஜினாமா செய்யப் போவதாக மதுரை தெற்குத் தொகுதி எம்எல்ஏ பூமிநாதன் தெரிவித்து இருப்பது திமுக ஆட்சிக்கு விடப்பட்டிருக்கிற எச்சரிக்கை மணி. சொந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரே (மதிமுகவில் இருந்தாலும் உதயசூரியன் சின்னத்தில்தான் அவர் போட்டியிட்டார்) அரசுக்கு எதிராகப் பேசியிருப்பது திமுகவினர் வெட்கப்பட வேண்டிய அவமானகரமான நிலை. திமுக ஆட்சியில் மக்கள் நலன் புறக்கணிக்கப்படுகிறது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அதற்கேற்ப எங்கள் கட்டமைப்புகளை நாங்கள் பலப்படுத்தியுள்ளோம். குறிப்பாக அடித்தட்டு மக்கள் மத்தியில் நாங்கள் வளர்ந்திருக்கிறோம். அந்த நம்பிக்கையில்தான் ஆட்சியைப் பிடிப்போம் என்று சொல்கிறோம்.

**ஆனால், சமீபத்தில் தந்தி தொலைக்காட்சி வெளியிட்ட, தமிழ்நாட்டு வாக்காளர்களின் தற்போதைய மனநிலை குறித்த கருத்துக் கணிப்பு முடிவுகளில் பிரதமர் பதவிக்கு ஏற்றவர் மோடியா ராகுலா என்ற கேள்விக்கு 71 சதவீத வாக்குகள் ராகுலுக்குத்தான் கிடைத்திருக்கிறது. 27 சதவீதத்தினர்தான் மோடியை ஆதரித்துள்ளனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பிரதமர் மோடியைவிட ராகுல் காந்திக்குத்தான் அதிக செல்வாக்கு என்பது இந்தக் கருத்துக் கணிப்பில் தெரிய வருகிறதே?**

அதனால் என்ன? போன முறையும் அப்படித்தான் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிட்டனர். இங்கே திமுகவுக்கு சாதகமாக சில ஊடகங்கள் செயல்படுகின்றன. அதை நாங்கள் பொருட்படுத்துவதில்லை.

**பொதுவாக தென்னிந்தியாவில் பாஜகவுக்கு செல்வாக்கு இல்லை என்பது அரசியல் நோக்கர்கள் கருத்து. தென்னிந்தியாவில் பாஜக ஆட்சியில் இருந்தது கர்நாடகத்தில் மட்டும்தான். அங்கேயும் நடந்த சமீபத்திய சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக 66 இடங்களை மட்டுமே பெற்று ஆட்சியை இழந்தது. இந்நிலையில், தமிழ்நாட்டில் அமித் ஷா சொல்வது போல் 2024இல் 25 இடங்களும் நீங்கள் சொல்வது போல் 2026இல் பாஜக ஆட்சி என்பதும் சாத்தியமா?**

2014 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஓர் இடத்தில்கூட வெற்றிபெறாத திமுக 2019இல் 38 இடங்களில் வெற்றி பெற வில்லையா. அதுபோல் நாங்கள் வருவோம். கருணாநிதி இருந்தவரை இந்த மாநில அரசியல் என்பது கருணாநிதி ஆதரவு, கருணாநிதி எதிர்ப்பு என்கிற வகையில்தான் இயங்கிக் கொண்டிருந்தது. கருணாநிதியை யார் கடுமையாக எதிர்த்தார்களோ அவர்கள்தான் ஆட்சியில் இருந்தார்கள். சிறந்த உதாரணம்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




Investor's Corner

TRIPLEX FOR SALE

★ Unique investment opportunity.
★ Purpose built Triplex in the City
★ Two - 2 Bed Rooms and One - 1 Bed Room
3 Kitchen
★ Large lot
★ 5 Parkings

Owner can Live and Rent - 2 Units

Asking Only $1,549,900

If Interested to view Call :
George Paranthaman, Broker 416.277.9044
Raja Mahendran, Broker/Owner 416.315.9397

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416.321.6969 * Independently owned and operated.


A METROPIA
MASTER-PLANNED
COMMUNITY
UNLIMITED LIVING.
UNIONCITY in
Downtown Markham
• FREE ASSIGNMENT FOR A LIMITED TIME ONLY
• FREE RIGHT TO LEASE
• CAPPED DEVELOPMENT CHARGES
• 15% DEPOSIT ONLY BEFORE CLOSING
UnionCity is conveniently situated just steps away from Unionville GO Station, York University Markham Campus, and Markham PAN AM Centre.


LAWRENCE HILL
Luxury Urban Towns
$5000 Travel Voucher!!
1 Year Free Maintenance
Free EV Parking Upgrade*
Right to Lease
Free Assignment
Capped Development Charges
Private outdoor spaces (balconies and rooftop terraces)
10%
Deposit Only *
CONTACT OUR SALES TEAM
(416) 569-4948 | (647) 296-0596

# தமிழ்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா. அதனடிப்படையில் சொல்கிறேன், இப்போது நாங்கள்தான் கடுமையாக திமுகவை எதிர்க்கிறோம் அதனால் நாங்கள்தான் வருவோம்.

**ஆனால், கூட்டணி தயவு இல்லாமல் வெற்றி பெற இயலாத நிலையில்தானே இப்போதும் பாஜக இருக்கிறது. இந் நிலையில் முக்கிய கூட்டணி கட்சியான அதிமுகவுடன் முரண்பாடுகள் வருவது வெற்றியை பாதிக்காதா?**



அந்த முரண்பாடுகள் வரத்தான் செய்யும், அது இயல்பானதுதான். தமிழ்நாட்டில் அதிமுக, திமுக இரண்டும்தான் பெரிய கட்சிகள். மூன்றாவதாக ஒரு கட்சி வளர்கிறது என்று சொன்னால் அந்த இரண்டு கட்சிகளுக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். நம் இடத்தை அவர்கள் பிடித்துவிட்டால் என்ன செய்வது என்ற போட்டி பொறாமை இருக்கத்தான் செய்யும். அதற்காக எங்கள் வளர்ச்சியை நாங்கள் நிறுத்திக்கொள்ள முடியாது. மாநிலத்தில் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்று விரும்பும் எந்தவொரு கட்சியும் அந்த இலக்கை நோக்கித்தான் செல்லும்.

**அதற்காக கூட்டணியில் இருக்கும்போதே பரஸ்பரம் இரண்டு கட்சித் தலைவர்களும் விமர்சித்துக்கொள்வதும், உங்கள் கூட்டணிக் கட்சியான அதிமுகவின் தலைவியாக இருந்த ஜெயலலிதாவை ஊழலில் தண்டிக்கப்பட்ட முதல்வர் என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பேசுவதும் சரியா?**

அது தவிர்க்க வேண்டியதுதான். யாராக இருந்தாலும் தவிர்க்க வேண்டும். ஆனால், எந்த சூழ்நிலையில் அண்ணாமலை அதை சொன்னார் என்று பார்க்க வேண்டும். அவருடைய பேச்சு தவறுதலாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது என்பதுதான் என் கருத்து.

**அமைச்சர் செந்தில் பாலாஜி தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறை, அமலாக்கத்துறை சோதனை, தொடர்ந்து அவரது கைது நடவடிக்கைகளை அரசியல் பழிவாங்கல், காழ்ப்புணர்ச்சியுடன் நடத்தப்படுகிறது என்று திமுகவினர் சொல்கிறார்கள். இதற்கு உங்கள் பதில் என்ன?**

அவர்கள் சினிமாவுக்கு கதை, வசனம் எழுதச் சென்றால் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். செந்தில்பாலாஜி மீதான இந்த அமலாக்கத்துறை சோதனையும் கைதும் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று. உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படிதான் இந்த சோதனைகள் நடைபெறுகி றது. அவர் செய்த ஊழல், அவர் வாங்கிய லஞ்சம்; அவர் அனுபவிக்கிறார். இப்போது செந்தில் பாலாஜி எந்த வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கிறாரோ அந்த வழக்கு தொடர்பாக செந்தில் பாலாஜி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவரை கைது செய்ய வேண்டும் என்று இன்றைய முதல்வர் மு.க. ஸ்டாலினே முன்பு பேசியுள்ளாரே. ஸ்டாலின்தான் இன்று மாற்றிப் பேசுகிறார். செந்தில் பாலாஜிக்கு உரிய தண்டனை கிடைக்கும், சட்டம் தன் கடமையை செய்யும்.

**நடிகர் எஸ்.வி. சேகர் கடந்த சில மாதங்களாக பாஜக மீது கடுமையான விமர்சனங்களை வைத்து வருகிறார். அண்ணாமலை தமிழ்நாடு பாஜக தலைவரான பிறகு பாஜகவில் பிராமணர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதுதான் அவரது முக்கியமான குற்றச்சாட்டு. பாஜகவில் பிராமணர்கள் புறக்கணிக்கப்படுகிறார்களா?**

பாஜகவில் அதுபோல் ஒரு குறிப்பிட்ட சாதியினரை ஒதுக்கி அரசியல் செய்வதற்கான வாய்ப்பே இல்லை. அவர் குறிப்பிடும் சாதியினர் நிறைய பேர் மாநில பொறுப்புகளில் இருக்கிறார்கள், மாவட்ட பொறுப்புகளில் இருக்கிறார்கள். தேசிய அளவில் மிக முக்கிய பொறுப்புகளில் இருக்கிறார்கள். நானே ஓர் உதாரணம். எஸ்.வி. சேகருக்கு தெரியவில்லை என்று நினைக்கிறேன். அவர் சொல்வது தவறு. எனக்குத் தெரிந்து அண்ணாமலை, ஒரு குறிப்பிட்ட சாதியினரை வெறுப்பதோ, ஒதுக்குவதோ இல்லை.

**அண்ணாமலை தன்னை மட்டுமே முன்னிலைப்படுத்திக் கொள்கிறார் என்பது எஸ்.வி. சேகர் உட்பட பலர் முன் வைக்கும் குற்றச்சாட்டு. தமிழ்நாட்டு பாஜகவின் 'வார் ரூம்' அண்ணாமலை புகழ் பாட மட்டுமே செயல்படுகிறது என்ற விமர்சனம் வைக்கப்படுகிறதே?**

எந்தவொரு அரசியல்வாதியும் தன்னை முன்னிலைப்படுத்தத்தான் செய்வார். தமிழ்நாடு அரசியல் அமைப்பில் 'பெர்சனாலிட்டி மேட்டர்' முக்கியம். எனவே, அது தவறே இல்லை.

**தமிழ்நாடு பாஜகவில் இதுபோன்ற கோஷ்டி மோதல்கள், முரண்பாடுகள் முன்பு இருந்தது இல்லை அல்லது இருந்திருந்தாலும் வெளியில் தெரிந்தது இல்லை. காங்கிரஸ் கட்சிக்குள்தான் கோஷ்டி என்று கார்டூன் போடுவார்கள். இதனால், 'நாங்கள் வித்தியாசமான கட்சி' என்பது பாஜக கோஷமாக இருந்தது. ஆனால், இப்போது பாஜகவிலும் கோஷ்டி மோதல்கள் தொடங்கிவிட்டதே?**

ஒரு குடும்பத்திற்குள்ளேயே ஆயிரம் கருத்து மோதல்கள் உள்ளன, பெரிய கட்சியில் இல்லாமல் இருக்குமா? இது எல்லாம் கடந்து போய்விடும். ஆனாலும், முடிந்தவரை இதுபோல் நடக்கக்கூடாது என்று நாங்கள் பயிற்சி கொடுக்கிறோம், நிர்வாகிகளிடம் தவிர்க்க வலியுறுத்துகிறோம்.

# நாமும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பாவித்து அதீத வேகத்தில் கட்டிட அனுமதிகளை வாங்குவதற்கு சில முறைகளை உள்ளூராட்சிகள் கொண்டுவர வேண்டும் என பொருளாதார நுட்பனர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

ரொறொன்ரோவிற்கு மேற்கிலுள்ள மில்ரன் (Milton) நகரம் இதில் முன்னணியில் உள்ளது. ஒன்ராறியோவின் முக்கிய 16 உள்ளூராட்சிகளில் அனுமதி வழங்குவதில் மில்ரன் முன்னிற்கு உள்ளது. ஏறக்குறைய 10 மாதங்கள் எடுக்கின்றது. சராசரி அனுமதி காலம் 21 மாதங்களாக இருக்க, மில்ரன் 10 மாதங்கள் மட்டுமே எடுக்கின்றது. இது ஒரு சிறப்பு ஆகும். மேலும் பல உள்ளூராட்சிகள் விரைவாக வும், நிர்மாணிகளிடம் பெறப்படும் தொகையை குறைப்பதற்கு பல வழிகளை தேடுவதனையும் காணலாம்.

எனினும் கனடிய அரசின் நீண்டகால நோக்கில் புதிய மக்களை உள்வாங்குவதில் புதிய பல முறைகளை கையாள்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

ஏற்கனவே ஜுன் 16, 2023 அன்று கனடா 40 மில்லியன் என்ற இலக்கை அடைந்து விட்டது. அடுத்த இலக்கு 50 மில்லியன் என்ற சனத்தொகை.

கனடாவின் பிறப்பு எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதால் புதியவர்களினாலேயே இதனை சீர் செய்தல் வேண்டும். புதியவர்களின் வருகை, ஆதன இருப்பிடத்திற்கு மேலும் நெருக்கடியை கொடுக்கும்.

இதனால் வாடகையும் அதிகரிக்கும், விலையும் அதிகரிக்கும். இது மாறாது.


Bill 23: The More Homes Built Fast Act.

இந்த நிலையில் ஜுன் 26, 2023 NDP (New Democratic Party) சேர்ந்த Olivia Chow தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்கால ரொறொன்ரோ எவ்வாறு இருக்கும்?







## BASEMENT FOR RENT

**WARDEN & ELLESMERE**
2 bedroom bsmt for rent with parking. Low Rent. Small family or Seniors preferred.
தொடர்புகளுக்கு: **647.717.3702**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom walk-out bsmt for rent. Sep.entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.241.2872**

**TAUNTON & WESTNEY**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry & new appliances. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.657.7191**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom fully renovated bsmt for rent. Sep. entrance, parking &laundry. Close to all amenities.
தொடர்புகளுக்கு: **416.879.7373**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking.Close to all facilities. Couple preferred. Avail. immediately. **தொடர்புகளுக்கு: 416.613.1792 / 437.477.6307**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to mall, school, TTC. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**647.806.5987 / 647.710.8479**

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

**14TH AVE. & 9TH LINE**
BY PASS (near walmart)
3 Bedroom brand new bsmt for rent. Sep. entrance & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.400.3462**

**KENNEDY & LAWRENCE**
1 bedroom bsmt with sep. kitchen & washroom. Preferred no smoking working person. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.727.8681**

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
2 Bedrooms for rent. Sep.entrance & Sep.laundry. Close to TTC & Eraa Supermarket. Avail. July 01, 2023.
**647.868.5871/416.292.5871**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all the facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

**BRIMLEY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.0011**

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Rent $2,200 + Utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.6573**

## BASEMENT FOR RENT

**McCowan Rd. & Denison St.**
**1 bedroom bsmt apt. for rent. Sep. entrance. 1 car Parking, Laundry. Avail. August 01, 2023. No pets & no smoking.**
**647.983.8242/416.602.2709**

## BASEMENT FOR RENT

**SCAR. GOLFCLUB & BRIMORTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry, parking. Close to school, Centannial college & TTC. No smoking & no pets. Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.622.0350**

## ROOM FOR RENT

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
1 bedroom for rent in a bsmt. Male preferred. Avail. July 01, 2023.
**647.895.6635 / 647.702.2271**

**NEILSON & FINCH**
Rooms for rent. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.427.4090**

**MARKHAM & 14TH AVENUE**
1 Room for rent in main floor. Ladies ( Students or working) preferred. No pets & no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.822.8446**

**TAUNTON & BURKHOLDER**
2 Bedroom for rent in a new house - upstaris. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.
**647.203.8774 / 647.467.1622**

**WESTNEY & ROSSLAND (Ajax)**
1 bedroom for rent in a house. Avail. immediately. Close to all facilities.
**தொடர்புகளுக்கு: 437.688.2440**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom for rent in a bsmt. Couple / ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**BELLAMY & EGLINTON**
One room for rent in an apartment. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.833.4878**

**WARDEN & FINCH**
One room for rent in a 3 bedroom apartment. Male preferred. Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.704.4444**

**MARKHAM & ELLESMERE**
Room for rent with food. Couple / Seniors preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **647.667.0482**

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**
1 bedroom for rent in a upstair house .Cable, internet, utilities & laundry. Single working lady preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
4 bedroom house for rent. 2.5 washrooms & 2 parking. Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.739.8865**

## *BASEMENT FOR RENT*

**ANDERSON & BROCK (WHITBY)**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.520.5883**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Large living hall with dining. Sep. entrance. Close to TTC, walmart, Srilankan Groceries & Schools.
தொடர்புகளுக்கு: **416.857.4619**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry. Close to Amazon, Canada Post, banks, TTC & all other facilities. Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.566.2601**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு:**647.680.3167**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent . Sep. entrance & laundry. Close to all facilities. No pets, no smoking & no alcohol. Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.660.4874**

மேலும் பக்கங்கள் 13,14,15

## BASEMENT FOR RENT

**MARKHAM RD. & ELLESMERE RD.**

**2 Bedroom Bsmt for rent. Sep. Entrance, Sep. laundry. 2 parking. Close to** பாடசாலை, **college,** பல்கலைகழகம், வைத்தியசாலை, மற்றும் அனைத்து வசதிளும் உண்டு. வீட்டு வாசலிலேயே 24/7 பஸ் வசதி யும் உண்டு. **Available August 01, 2023.**

**647.885.6148 / 647.505.9919**

## ROOM FOR RENT

**BRIMLEY & FINCH**

1 bedroom for rent in a bsmt. Shared washroom & kitchen. Avail. immediately. Close to all facilities. Working professional / student. Female preferred.

**தொடர்புகளுக்கு: 416.522.2436**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

2 Bedrooms for rent in a 3 bedrooms Condo. Single, students, working people preferred. No pets, No smoke & No alcohol. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.298.9718**

## *CONDO. FOR RENT*

**HWY 401 & KENNEDY**

Tridel condo. 2 bedroom, 2 washroom Avail. July 18th, 2023. 2 month Rental. Good condition. 24 hrs. concierge.

தொடர்புகளுக்கு: **Nathan**

**647.786.1580 / 416.720.7439**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

2 bedroom bsmt for rent . Sep. entrance, parking & laundry. Couple, Students or small family preferred. No smoke, no pets. Close to all facilities. Avail. July 01, 2023.

**647.569.0376/647.228.6841**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & DENISON**

Full legal 1 bedroom + den bsmt for rent. Kitchen, living & dinning. Fire safety & walk up Sep. entrance, sep. laundry & parking. Rent $1900 per month. Close to all facilities.

தொடர்புகளுக்கு: **647.802.7021**

## ROOM FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

Room available for rent in a house. Close to all the facilities. Students/ working professionals preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.731.3314**

## HOUSE FOR RENT

**WARDEN & ELLESMERE**

3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/ Working people preferred. Close to TTC & all the facilities. Avail. August 01, 2023.

தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE FOR RENT

**VICTORIAPARK & LAWRENCE**

1 Bedroom annex house - - Bachelor house for rent. Sep. Kitchen & Sep.Washroom. Avail. immediately.

**416.288.9575/647.762.9575**

## HOUSE FOR RENT

**STEELES & WHITES ROAD**

4 Bedroom 2 story detached house for rent. Close to park, public transportation & all the facilities. 10 mins. drive to Markham & Steeles. Avail. immediately.

**416.786.5816 / 647.891.5290**

## HOUSE/ BASEMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**

3 Bedrooms newly renovated bunga low house for rent. **Also** 3 bedrooms bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to TTC & all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.569.0657**

## HOUSE FOR RENT

**MORRISH & ELLESMERE**

3 bedroom house for rent. 1 wash room, kitchen, living room, double garage & parking. Close to library, schools & TTC. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.994.7849**

## HOUSE / ROOM FOR RENT

**RITSON & TAUNTON RD.**

3 Bedroom (main floor) house for rent. **Also** 1 bedroom available for rent in 2nd floor. Close to all the facilities. Avail. July 2023.

தொடர்புகளுக்கு: **647.764.3697**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

STAINES & MORNINGSIDE

2 Bedroom walkout basement for rent.

3 Bedrooms house for rent.

Contact: **647.686.8590**

## ROOM FOR RENT

**THICKSON & DRYDEN ( WHITBY)**

Fully furnished room for rent. Female ONLY. Students are welcome. Sharing the whole upper floor with only one other working lady. Very clean and quite, water, electricity, gas, internet, laundry & parking included. Walking distance to public transport, nofrills & schools. "MUST SEE"

Avail. immediately. **Email: n_rajah@sbcglobal.net**

தொடர்புகளுக்கு: **437.971.9000**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

**We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.**

உங்களது **rooms, house or basement**இனை சட்டரீதியாக **University / College Students** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee – 416.272.6811 / Hari – 647.262.8490**

**HomeLife Future Realty Inc. Brokerage**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**

2 bedroom + den bsmt for rent. Sep.entrance, Parking & laundry. Close to Amazon, Canada Post, TTC, YRT, Major Banks, Srilankan grocery stores & all other facilities. No pets, no smoking & no alcohol. Working female or students preferred. Avail. June15, 2023.

**Please Contact 647.284.2735**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen.

தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

1 large bedroom with sep. washroom for rent. 2 or 3 people can share - male preferred. $1400 per month including utilities. No kitchen available. **Also** another room for rent.Rent $900. No alcohol, no smoking & no pets. Close to all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.507.2148 / 647.864.1051**

## HOUSE / BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

4 bedrooms house for rent. **Avail. July 01, 2023.**

Also 2 bedroom bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to all facilities. **Avail. immediately.**

**WESTNEY & TAUNTON**

4 bedrooms detached house for rent **. Avail. immediately.**

தொடர்புகளுக்கு: **416.836.0010**

## JOB JOB JOB

Line cook (full time), Dishwasher (part time) needed for a busy restaurant - OakSide Bar & Lounge, in Markham / Stouffville. Immediate positions available. Line cook ,Dish washer போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம். **Good Pay & Benefits available**

தொடர்புகளுக்கு: **647.406.2405**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## முதியோர் பராமரிப்பு

உங்கள் வீட்டில் உள்ள முதியோர் களுக்கு உதவ நாங்கள் உள்ளோம். உங்கள் வீட்டிற்கே வந்து உங்கள் முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எங்களை அழைக்கவும். எங்களுடன் தமிழிலும் ஆங்கிலத்திலும் கதைக்கலாம். தொடர்புகளுக்கு:

புனிதா (PSW) – 647.580.5244

## HANSON COLLEGE

Hanson College Offers Summer Classes

Free English Classes Grade 11 & Grade 12 Starting July 17, 2023.

Other Courses: Hospitality Restaurant Hotel & Management, Travel & Tourism, General Business, Project Management, Ext.

2 years Certificate course. மேலதிக தொடர்புகளுக்கு:

Vishwa - 647.403.3127/ sviswanathan062@gmail.com

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**பிறேம்–647.835.5244**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## LAND FOR SALE IN WATTALA

இலங்கையில் கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் செல்லும் வழியில் உள்ள வத்தளைச் சந்திக்கு அருகாமையில் உள்ள **45** பேர்ச்சஸ் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணியை முழுதாகவோ அன்றி பகுதியாகவோ வாங்கலாம். விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு அழையுங்கள் **416.839.7064**

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement

**647-861-8240**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான (Graduated in Medical office administration) பெண் ஒருவருக்கு மணமாகாத 38 - 40 வயதுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:

**416.551.9737 / 647.937.1243**

## RABBITS FOR SALE

**Rabbits for sale in Scarborough.**

வீட்டில் வளர்க்கும் முயல் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**647.766.7779**




மேலும் பக்கங்கள் 12,14,15

## OFFICE SPACE FOR RENT

Office space for rent in Scarborough. Large room. On Finchdene Square. Avail. Immediately.

தொடர்புகளுக்கு: **647.885.1540**

## ALTRA PAINTING

**Altra Painting and General Repair.**

Free estimate. தொடர்புகளுக்கு:

**416.315.9348**

senthi0115@gmail.com

## JOBS AVAILABLE

Full time & part time jobs available at a busy Canadian Restaurant in Durham Region. Looking for **Front House Manager & Cook.** Immediate positions available. தகுந்த சம்பளம் மற்றும் சலுகைகள் உண்டு.

### BOOK KEEPING JOB AVAILABLE

**LOOKING FOR AN OFFICE HELPER.**

Knowledge and Experience of Quick Books & Accounting is an asset.

Part time or Full time job available.

### HOUSE KEEPING JOB AVAILABLE

**9th LINE & 14th AVENUE**இல் அமைந்துள்ள வீடு ஒன்றில் பகுதி நேரம் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை. Looking for a **HOUSE KEEPER to do Laundry, cooking & cleaning. Will pay $1000 Cash per month for part time.** Permanent Job. Full time also available.

Please call- KRIS: **647.802.7021**

Email: **restaurantjobhiring@gmail.com**

## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் | பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## றொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

இணையவழிக் கலந்துரையாடல்

நாள் : 07 ஜூலை (வெள்ளிக்கிழமை 2023 )
நேரம் : இரவு 8:30 – 10:30 மணி ( கனடா றொறன்ரோ)
நாள் : 08 ஜூலை (சனிக்கிழமை 2023 )
நேரம் : காலை 1:30 – 2:30 மணி ( இலண்டன் )
காலை 6:00 – 8:00 மணி(இலங்கை, இந்திய )
காலை 10:30 – 12:30 மணி(அவுஸ்திரேலியா சிட்னி)



"சூடிக்கொடுத்த சுடர்க்கொடி"

பேசுபவர்: பேராசிரியர் கு. வெ. பாலசுப்பிரமணியன்

Zoom ID: 84777257162 Passcode: 554268

# STACK TOWN HOUSE FOR SALE

HOT PROPERTY

5% Down Only

$669 000



- 3 Bedroom
- 2 Full Washrooms
- Practical Layout
- Beautiful Modern Kitchen
- Laminated floor
- Fridge, stove, Washer, Dryer & B/I Microwave.
- Close to all Amenities
- Ellesmere & Birchmount

for further details :



TISI PARA
Real Estate Agent
(647) 296-0596

HOMELIFE
HomeLife/GTA Realty Inc., Brokerage
O : 416-321-6969 F: 416-321-6963



வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 59
Psychosocial Educational Series - 59

VASANTHAM
TAMIL WELLNESS CENTRE

## The Trauma of the Children in Vanni and Jaffna Regions
## வன்னி - யாழ்ப் பிராந்திய குழந்தைகளின் துயரம்
### Two Experts Visiting from the North are speaking the Truth

3rd July 2023 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 - 2:00 am (Tuesday)
Sri Lanka: 4:30 - 6:30 am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588



Thirugnanam Subramaniam
B.Ed
Ex-Principal of Pandiyan Kulam and Vidyananda College, Director of Education



Jeya Thambiah
BA (Hons), Post Grad Diploma in Education (PGD.E), Master of Education (M.Ed), Chief Executive Director of Aaruthal

Join us via zoom: CLICK HERE or go to link below in the email

Join our Zoom Series every 1st & 3rd Mondays of the month!



Hosted by
Dr.Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMWELLNESSCENTRE
647-374-4685
VASANTHAM.CA



wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

*Brampton* — Sandalwood Pkwy/Bramalea
(3Brm + 3Bath) [$3,199/m]

*Brampton* — Torbram/Peter Robertson - Bsmt
(2Brm + 1Bath) [$1,950/m]

*Toronto*— Lakesshore/Parklawn - Condo
(2Brm + 2Bath) [$3,250/m]

*Toronto* — Lesile/Steeles – Condo Townhouse
(4+11Brm + 3Bath) [$3,200/m]

*Toronto* — Yonge/Steeles Ave W – Semi-Detached
(4+Brm + 2Bath) [$2,700/m]

*Toronto* — Warden/Finch – Detached
(4+1Brm + 4Bath) [$4,000/m]

**Available for Rent**

*Oshawa* — Sincoe St/King St - Bungalow
(3Brm +1Bath) [$2,200/m]

*Whitby*— Dundas/Newmand Blvd - Bsmt
(2Brm+1Bath) [Call us]

*Whitby*— Dundas/Hwy 412 - Bsmt
32Brm+2Bath) [$1,850/m]

*Pickering*— Taunton Rd/Whites Rd - Townhouse
(4Brm +3Bath) [$3,100/m]

*Pickering*— Brock/Taunton – Condo Town House
(3+1Brm +3Bath) [$2,800/m]

*Ajax*— Salem Rd/Rossland Rd/Audley Rd – Detached
(4Brm +3Bath) [$3,900/m]

*Ajax*— Westney Rd/Ravencroft – Detached
(3Brm +2Bath) [$2,550/m]

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# கூட்டுக் குடும்ப மேன்மைகள் மீள வேண்டும்!

- பேராசிரியர் என். சண்முகலிங்கன் -

எங்கள் பாரம்பரியம் என்று கொண்டாடிய வாழ்வியல் இன்று மண்ணிலிருந்து தூர விலகியும், வேரோடு பிரிக்கப்பட்டும், வெட்டி சாய்க்கப்பட்டும் எழுதும் உயிர் வலி கனமானது. இவ்வேளை இம் மண்ணின் முன்னை வாழ்வியல் மேன்மைகளை அறிதலின், பகிர்தலின் இன்றியமையாமை பெரிதும் உணரப்படும். வாழ்வின் அனைத்து முகங்களிலும் நிகழும் இவ்வாறான அசைவியக்கத் தினை சமூகத்தின் அடிப்படை நிறுவனமான குடும்பத்தினை- குறிப்பாக கூட்டுக் குடும்பத்தினை (Joint Family) மையமாகக் கொண்டு விளங்கும், விளக்கும் ஒரு தேடலாக இக்கட்டுரை அமைகின்றது.

ஒரே கூரையின் கீழ் மூன்று அல்லது நான்கு தலைமுறையினர் கூடி வாழும் அமைப்பாகவே கூட்டுக் குடும்பம் வாய்த்துள்ளது. குடிவழி நேராக வருகின்ற பாட்டன், பாட்டி, பெற்றோர், பேரன், பேத்தி ஆகியோரும் - கிளைவழி வரும் பெரியப்பா, சித்தப்பா போன்ற உறவினரும் கூட்டுக் குடும்பத்தில் இணைந்திருக்கிறார்கள். இக்கூடிவாழ்தலின் அடிப்படைப் பண்பாக இரத்த உறவுள்ள உறுப்பினர்களே இணைந்துள்ளதனால் இதனை இரத்த உறவுக் குடும்பம் (Consanguine Family) எனவும் மானிடவியலாளர் குறிப்பிடுகின்றனர்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது முதுமொழி. கூட்டுக் குடும்ப வாழ்வு தந்த, தருகின்ற நன்மைகள் எல்லை யிலாதன. ஆலமரமாய் விழுதுகளுடன் செழுமை கண்ட கூட்டுக்குடும்பம் அன்பினை பகிர்ந்து, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் சமுதாய வாழ்வின் பயில் களமானது. இந்த வகையில் குடும்ப நிறுவனத்தின் கால்வழி தொடர்ச்சியாய் மலர்ந்த குழந்தைகளின் பண்பாட்டுவயமாக்கலில் கூட்டுக்குடும்பம் கொண்ட இடம் முக்கியமானது. உலகப் பண்பாடுகளின் குழந்தை வளர்ப்பு பற்றிய தொடக்க கால மானிடவியல் ஆய்வுகளிலிருந்து இன்றைய எமது பெற்றோரியம் (Parantology) பற்றிய ஆய்வுகள் வரை உணர்த்தும் உண்மைகள் பெறுமதியானவை. தாத்தா - பாட்டி சொன்ன கதை, கதை சொன்னபடி வாழுதற்கான முன் மாதிரியாக உடன் வாழுகின்ற கதை கூட்டுக் குடும்பத்திலேயே வசமானது.

இயற்கையோடு இசைந்த, இயற்கை யோடு நட்புறவு பூண்ட வாழ்விற்கு ஏற்பவே வாழ்விட சூழலும் அமைந்தது.

வட்டவடிவமான குடிசை, கூம்பு வடிவிலான கூரை. வேயப்பட்ட இக் கூரைகள் நடுவிலுள்ள தூணில் தங்கியுள்ளன. வீட்டைச் சுற்றி நாலடிக்கு



மேற்படாத உயரம் கொண்ட சுவர்கள், வீட்டின் முன்புறம் சுவர்களோடு சேர்ந்த வாறு அமைக்கப்பட்ட திண்ணைகள். இக்குடிசைக்கு முன்புறத்தே திறந்த வடிவிலான மால் குடும்பத்தவரும் அயலவரும் கூடிக் களிப்பதற்கான களமாக அமைந்தன.

காலனித்துவம் தந்த கல்வீடுகளில் கூட நாற்சார் வீடுகளை பண்பாட்டிற்குகந்த கூட்டுக்குடும்ப அரணாகக் கண்டது எங்கள் புலம்.

காலவெளியில் கல்வி வழியான தொழில் வாய்ப்புக்கள், ஏனையப் பண்பாடுகளுட னான இடைவினைகளின் வழி சமூக அசைவும் மாற்றங்களும் விளைந்தபோது குடும்பக் கட்டமைப்பில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. நகரமயமாக்க, நகரிய (Urbanism) - மேலைமயமாக்கச் சிந்தனை அதிகரிக்க அதிகரிக்க கூட்டுக்குடும்பங்கள் அருகத் தொடங்கின.

கிராமத்து வட்ட மாலில் இருந்தபடி, நாற்சார் வீட்டின் நிலா முற்றத்தில் இருந்தபடி நிலாவோடு பேசிய, நிலாவிலே பேசி மகிழ்ந்த வாழ்வின் அர்த்தங்கள் இன்றைய தலைமுறையினர் அறியாத சங்கதிகளாயின.

தீவுகளாய் தனித்துப்போன மூலக் குடும்பங்கள் பெருகின. மூலக்குடும்பங் களுக்குள்ளேயே தனிமனிதராய் முடங்கிப் போன வாழ்க்கை முறை வரவானது. இயற்கையுடன் இசைந்த வாழ்வு தொலைந்தது. வீடும் வாசலும் செயற்கை யானது. வீடுகள் 'ஹொட்டேல்கள்' போலாகின.

'தலைவீடு ஏதுமற்ற சுதந்திரமாக' தனிக் குடும்பம் பற்றிய கருத்தியல் கட்டமைக் கப்பட்டது. காலங்காலமாக ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் கூட்டு வாழ்வின் விழுமியம் கேள்விக் குள்ளானது. 'தலைமுறை இடைவெளி' என்ற கருத்தாக்கத்தின் வழி, அன்பின் வழியான உறவுப் பிணைப்புகளுக்கிடை யிலான புரிந்துணர்வுக்கான வெளி அடைக்கப்பட்டது.


தனிக்குடும்பத்தில் பெற்றோரும் பிள்ளை களும் மட்டுமே உள்ளதால் பிள்ளை களின் ஆளுமை வளர்ச்சியில் அதிக நேரம், அதிக கவனம் செலுத்த முடியும் எனப்பட்டது. நடைமுறையில் குறிப்பாக பெற்றோர் இருவரும் தொழிலுக்கு செல்லும் நிலையில் அடிப்படைக் கவனிப்பே கேள்விக்குள்ளாகியுள்ளது. குஞ்சு வயதிலேயே குழந்தை பராமரிப்பு நிலையங்களுக்குள் பிள்ளைகளைவிட நேரிடுவதும் இயல்பான உறவு - அன்பினுக்கான ஏக்கம் மிக இள வயதிலேயே பிள்ளைகளுக்குள் வேர் விடுவதனையும் இன்றைய ஆய்வு அவதானங்கள் வெளிப்படுத்துகின்றன. தேங்கிய இந்த ஏக்கத்தின் பெருக்கமாகவே இன்று நாம் பெரிதும் கவலை கொள்ளும் வன்முறை நடத்தைக் கோலங்கள் அமைவதனைக் காண முடியும்.

கூட்டுக் குடும்ப வாழ்வில் ஆளுக்காள் ஆதரவாய் - அனுசரணையாய், அரவணைத்து நின்ற வாழ்வில் அன்பில் அனைவரும் நலம் கண்டனர். பேரப்பிள்ளைகளோடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்த நாட்களை நினைவுகளில் சுமந்தபடி ஏக்கம் கனக்க முதியோர் காப்பகங்களில் வாடும் முதியவர் துயரம், கூட்டுக்குடும்பம் தழைத்திருந்த காலத்தில் எம் புலங்களில் இருந்ததில்லை.

கூட்டுக்குடும்பங்களின் தீர்மானக் காரணி களில் ஒன்றான சொத்துடைமை தொடர்பாக நிகழும் மாற்றங்களும் இங்கு கவனத்துக்குரியன. கூட்டான சொத்து, கூட்டுக் குடும்பத்தின் அடிப்படையாகும். அவரவருக்கென பங்கு இருந்தாலும் அனைவரது உழைப்பும் பொதுவுடமை யாக தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப் பட்டன. இன்றோ கூட்டினைக் காக்க எடுக்கும் முயற்சியாக 'சீவிய உரித்தென' சீதனமாக கொடுக்கும் வீட்டிற்கு, தான் வாழுங் காலம்வரை உரித்துடையவர் என எழுதி பிற்காலத்தில் தன் இருப்பிடத்தை ஒரு தாய் உறுதி செய்யவேண்டிய அளவுக்கு எமது பண்பாட்டுப் புலங்களின் கூட்டுக்குடும்ப அவலமுள்ளமை கவலைக்குரியது.

கூட்டுக்குடும்பமாக இனிது பிழைத்திருந்த எம் பாரம்பரிய கிராமிய வாழ்வினை முற்றாக சிதைத்துவிட்ட இடப்பெயர்வு, புலம்பெயர்வு, உறவுகளின் காணாமல் போதல், உயிரிழப்பு என்பனவற்றைத் தொடர்புபடுத்தியும் ஆராய வேண்டியது அவசியமாகும். கூடிவாழ இடமில்லை, கூடிவாழ உறவில்லை என்பதான நிலைமைகள் இங்கு கவனம் பெற வேண்டியன. பிடுங்கி எறியப்பட்ட கூட்டுக் குடும்பங்களுக்கான மீள்நடுகையென்பது சாதாரணமானதொரு விடயமல்ல. முழுச் சமுதாயமுமே கூட்டுக்குடும்பமாகி மீள் வாழ்வுக்கான வழிவகைகளை காண வேண்டியது அவசியமாகும்.

ஆலமரமான கூட்டுகுடும்பம், ஒற்றைப் பனைமரமாகி காலங்காலமாய் காக்கப் பட்டு வந்த கூட்டு வாழ்வின் விழுமியங் களை மீட்டல் பற்றிய விழிப்புணர்வு காலத்தின் தேவையாகும். கூட்டுக்குடும்ப



நிறுவனத்தினை காத்து மேம்படுத்தும் பேரிலக்குடன் இன்றைய தளர் நிலைக் கான அடிப்படைகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். வாழ்வியலை மீட்கும் முயற்சி கள் தனியே எங்கள் பண்பாட்டு நினைவு களை பேணுகின்ற வரையறைக்குள் முடிவனவல்ல. காலனித்துவத்துக்குள் வேர்விட்ட மேம்பாடு பற்றிய சிந்தனை களினதும் மேலைமயமாக்க, உலகமய மாக்க சித்தாந்தங்களினதும் வன்முறைக் குள் சுய பண்பாட்டின் மேன்மைகளை புறந்தள்ளிய கருத்தாக்கங்களைக் கடந்து, பாரம்பரிய பிராந்திய - பண்பாடு மையங்களை நோக்கி நகர அழைக்கும் புதிய சிந்தனைத் தடத்தில் எங்களது கூட்டுக் குடும்ப மேம்பாடு பற்றிய உரையாடல்கள் செழுமை பெறவேண்டும்.

சாகும் போது
நமக்கு
வேண்டாதவரையும்
பார்க்க
விரும்புகின்றோம்...
வாழும் போது
நமக்கு
வேண்டியவரையும்
பார்க்க
மறுக்கின்றோம்..!

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# பாராட்டுதலில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

புன்னகைகூடப் பாராட்டுத்தான். ஒருவரை நீங்கள் உண்மையாகப் பாராட்டும்போது உங்களது உண்மையான குணமும், தன்மையும் தானாக வெளிப்படுகிறது. சரியான சமயத்தில் பாராட்டுங்கள். உண்மையாக மனதாரப் பாராட்டுங்கள். முன்னேற்றப் படிக்கட்டில் ஏற முக்கியமான ஒரு குணம் பாராட்டும் மனம். டேல் கார்நிஜி என்ற ஆங்கில எழுத்தாளரின் "HOW TO WIN FRIENDS AND INFLUENCE PEOPLE" நூலில் மனிதர்களுடன் நல்ல உறவு, நிறைய நண்பர்கள் வேண்டுபவர்கள் அவர்களை மனம்விட்டுப் பாராட்டுங்கள் என மறுபடி, மறுபடி சொல்கிறார்.

பாராட்டுவதில் ஏன் தயக்கம்? பாராட்டி வளர்க்கப்படும் குழந்தை புத்திசாலியாகவும், தன்னம்பிக்கைப் பண்பில் சிறந்ததாகவும் வளர்கிறது. நம்பிக்கையை வளர்ப்பதுடன் பாதுகாப்பு உணர்வைப் பெருக்கும். கற்பதைத் தூண்டும். நல்லெண்ணத்தை மனதில் பதியவிடும். பிறருக்கு உதவும் மனப்பாங்கை ஏற்படுத்தும். மனிதநேயத்தை ஊட்டும். மானிட உறவுகளை தழைத்தோங்கச் செய்யும். ஆகவே வாழ்க்கையை மெலிதாகத் தொட்டுச் செல்லும் மனிதர்கள் செய்யும் சிறு காரியங்களைக் கூட பாராட்டுங்கள். அவர்களுக்கு அந்நாள் சிறப்பாக அமையும். நம் மனநிலையும் ஆக்கபூர்வமாக அமையும். உங்களுடன் வாழும் மனிதர்களின் நல்ல பண்புகளை, நல்ல செயல்களைப் பாராட்டுங்கள். அது அவர்களது வாழ்க்கையை சிறப்பானதாக மாற்றும். வீட்டுக்குள்ளும் பாராட்டுக்கள் அவசியமா? என யோசிப்போரும் உள்ளனர். அது வீண்வாதம். பாராட்டுக்கள் அதிகமானாலும் பாதிப்பில்லை. குறைவானால்தான் பாதகம். முடியாதவர்களிடம் முடியும் என்று சொல்லிச் சற்று அதிகப்படியாக பாராட்டினால்கூடப் பிழையில்லை. முடியுமென்பவரையும் பாராட்டாமல் விட்டால் பலர் தங்கள் திறமைகளின்மேல் நம்பிக்கை இழந்துவிடுவர்.



அன்பு எங்கே ஊற்றெடுக்கும் தெரியுமா? பரிவும், தட்டிக்கொடுத்தலும், பாராட்டும் இருக்கும் இடத்தில்த்தான். குழந்தைமுதல் பெரியவர்கள்வரை அனைவரும் பாராட்டப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். பாராட்டுக்கள் வெறும் வார்த்தைகள் அல்ல. அது உத்வேகம் அளிக்கும் வார்த்தைகள். ஒருவரது முயற்சி சின்னதாக இருப்பினும்சரி, பெரிதாக இருப்பினும்சரி அம்முயற்சியை பாராட்டுங்கள். "அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்புஎன்னும் நாடாச்சிறப்பு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அன்பு ஒன்றே மனிதனிடத்தில் ஆர்வம் உண்டாக்கும். அதனால் முடிந்தவரை மற்றவரை பாராட்டுங்கள். பிறருடைய நிறைகளை பலர் முன்னிலையில் பாராட்டவேண்டும். குறைகளை தனிமையில் நாசுக்காக சுட்டிக்காட்ட வேண்டும்.

தனிமனிதனுடைய அமைப்புக்களது தேடலை, ஆற்றலை, செயலை மென்மேலும் வளர்த்துக்கொள்ள உந்துசக்தியாகிறது பாராட்டு. சமுதாயத்தில் பாராட்டுப் பெறுபவர்கள் எல்லோரும் போற்றப்படுகின்றனர். ஒரு நாளில் எத்தனை பேரிடம் பாராட்டு வாங்குகிறோமோ அவ்வளவு நல்ல சேவையை செய்கிறோம் என்பது சேவை நிறுவனங்கள் தங்கள் பணியாளருக்கு சொல்லித்தரும் பாடம். ஒருநாளில் எத்தனைபேரை பாராட்டுகிறீர்களோ அவ்வளவு நல்ல வாழ்க்கை வாழ்கிறீர்கள் என்பதுபொருள். பாராட்டுவதற்காகப் பாராட்டு. பாராட்டுவதற்குப் பாராட்டப்படும் பொருளோ, மனிதரோ அருகதையாக இருக்கவேண்டிய அவசியமில்லை. பாராட்டுபவரின் அருகதைதான் முக்கியம்.

உங்கள் பாராட்டு என் வார்த்தைகளுக்குப் பெருமை சேர்த்தது. இனி என் வார்த்தைகள் உங்கள் பாராட்டுக்கு பெருமை சேர்க்க விழையும். பாராட்டுரை சக்தியை அதிகப்படுத்துகிறது. நேர்மறை எண்ணங்களை வளர்த்து, எதிர்மறை எண்ணங்களை அடியோடு நீக்குகிறது. வெற்றியடைந்த பின் பாராட்டும் வார்த்தைகள் இல்லையெனில் அது ஒரு வெற்றிபோலவே தெரியாது. தோல்வி அடைந்தபின் தட்டிக்கொடுக்கும் வார்த்தைகள் இருந்தால் அது ஒரு தோல்வியாகவே தெரியாது. ஒரு மென்மையான வார்த்தையால் பாராட்டுக் கிடைத்தால் அதிசயங்களையும், அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்ட முடியும். நாம் ஒருவருக்கு அளிக்கும் சிறுபாராட்டு என்பது நமக்கு வார்த்தை, அவர்களுக்கு வாழ்க்கை. அடுத்தவர் செய்யும் நல்ல விஷயங்களைப் பாராட்ட தைரியம் இல்லாதவன் அடுத்தவன் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டத் தகுதியே இல்லாதவன் ஆவான். பாராட்டுதல் மூலம் ஒருவன் ஊக்கமடைகிறான். பிறரைப் பாராட்டுங்கள் பாராட்டுக் கிடைக்கும். இவை ஒற்றை வழிப்பாதை அல்ல. இரட்டை வழிப்பாதைகள். உறவுகளை மதிக்காவிட்டாலும் அவர்களது உணர்வுகளை மதியுங்கள்.

பராட்டுபவர் நல்ல வழிகாட்டி. பாராட்டு ஒரு மனிதனுக்கு ஊக்கமருந்தாகும். ஒரு செயலைச் செய்பவனை பாராட்டும்போது அவன் அச்செயலை இன்னும் சிறப்பாக செய்ய முயற்சி செய்வான். ஒருமுறை பாராட்டப்பட்டவன் நிச்சயமாக மறுமுறையும் பாராட்டுப்பெற முயல்வான். பாராட்டை எல்லோரும் விரும்புவார்கள். எனவே பாராட்டில் சிக்கனம் வேண்டாம்.

# மிகவும் வசதியான இடம்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.timelesstoday.com**
**www.premrawat.com**

ஒவ்வொரு மனித உள்ளத்திற்கும் அமைதி தேவைப்படுகிறது. அவர்களின் கலாசாரம், சமயம் எதுவாக இருந்தாலும் அல்லது அரசியல் எதுவாக இருந்தாலும் இந்தப் பூமியில் உள்ள ஒவ்வொருவருக்கும் அமைதி தேவைப்படுகிறது.

வெளியுலகில், நமது தோலின் நிறம் வித்தியாசமானதாக இருக்கலாம், ஒருவரைப்போல இன்னொருவரின் முகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தோலைத் தூக்கிப் (உரித்துப்) பார்த்தால் உடனடியாக அந்த வித்தியாசம் மறைந்துவிடும். அது எந்தக் கலாசாரத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தப் பின்னணியைக் கொண்டவர்களாக இருந்தாலும். இங்குள்ள வித்தியாசம் எல்லாம் மிகவும் மெல்லிய தொரு தோல்தான். நாம் மக்களில் வித்தயாசமெனக் கூர்ந்து கவனிக்கும் விடயம் என்னவென்றால், உண்மையாகவே, ஒற்றுமைகளைத்தான். ஏனெனில் இறுதியில் எல்லோரும் அமைதியையும், நிறைவையும், ஆனந்தத்தையும், தமது வாழ்வில் உச்ச திருப்தியையும் தேடுகிறார்கள்.

இந்த வாழ்வெனும் பிரயாணத்தில் நாம் எங்கிருந்தாலும் பரவாயில்லை எங்கள் விருப்பங்கள் ஒன்றுதான். எனது வாழ்வில் எவ்வளவோ விடயங்கள் மாறுபட்டாலும், எதுவுமே மாறவில்லை. ஏன்னிடம் இருந்த அதே ஆனந்தத்திற்கான அதே தாகம், அதே திருப்திக்கான, அதே நிறைவிற்கான தாகம், அதாவது என்னிடம் எப்பொழுதும் அத்தாகம் என்னிடம் உள்ளது,

எனது கண்களைத் திறந்து எனது உயிர் வாழ்வின் அழகை, நான் நானாக இருப்பதன் எளிமையை நான் இரசிக்க விரும்புகிறேன். ஏனெனில் இங்கே தான் மிகவும் சிறப்புவாய்ந்த பரிணமிப்பானது நடைபெறுகிறது. எனக்கு வழங்கப்பட்டிருக்கும் வாழ்வு என்னும் கருவியை நான் இசைத்து அது தரும் ஒலிகளைக் கேட்க விரும்புகிறேன்.

எவ்வளவோ மக்கள் நான் ஏதோ மந்திரம் ஒன்றை, அவர்களால் பேசக்கூடிய மந்திரச் சொல் ஒன்றை அவர்களுக்குக் கொடுப்பேன் என்றும் -அத்துடன் 15 வருடங்களாக ஸ்ராட் செய்யாமல் இருந்த அவர்களின் கார் திடீர் என ஸ்ராட் ஆகும் என்ற நம்பிக்கையுடன் நான் கூறுவதைக் கேட்கிறார்கள். அலாவுதீனும் அற்புத விளக்கும் என ஒவ்வொரு கலாசாரத்திலும் அவர்களுக்கான வழிகளில் கூறப்படும் கதைபோல தற்செயலானதொன்றல்ல இது. நாம் ஒரு விளக்கால் தேய்க்கும்போது, ஒரு பூதம்தோன்றும், அதனிடம் நாம் "இதைச் செய்" எனக் கூறும்போது எல்லாமே நடைபெற்றால் எவ்வளவு அற்புதமாக இருக்கும்.

ஆனால் நான் மக்களிடம் கூறுவது: உங்களிடம் போத்தல் ஒன்றில் அடைக்கப்பட்ட பூதத்தைவிட அளப்பரியதொன்று உள்ளது. அது உங்கள் உள்ளமெனும் மேடையில் நடனமாடுகிறது, உங்களை அரவணைப்பதற்கான ஆனந்தம் உள்ளது. அந்தக் கடைசி விருப்பம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏனெனில் அமைதிக்கான அந்தக் கடைசி விருப்பம், ஆனந்தத்திற்கான கடைசி விருப்பம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் உயிர் வாழ்வைப் பார்த்தால் அது ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் கதைக்கும் அமைதியானது யுத்தம் இல்லாமையால் ஏற்படும் ஒன்றல்ல, ஆனால் அது அடைய வேண்டியதொரு விடயம்.

எமக்கு என்ன தரப்பட்டிருக்கிறதென்பதை நாம் அறிந்துகொண்டால் மட்டுமே எமது தாகம் நிறைவடையும். அந்தச் செய்தி என்னவென்றால் "நீ எதைத் தேடுகிறாயோ அது உன்னுள்ளேதான் இருக்கிறது" என்னும் மிகப் பழமையானதொரு செய்தி. எவ்வளவோ மக்கள் அதைக் கூறியிருக்கிறார்கள். சிக்கலற்ற எளிமையான கண்களால் அதைப் பாருங்கள். வாழ்வு அதன் சிக்கலான தன்மையால் அன்றி அதன் எளிமையான தன்மையால் கவர்ச்சியானது.

எப்பொழுது அமைதியைப் பற்றிய பேச்சு வருகிறதோ அப்போ "சும்மா இருந்து அழகான சிந்தனைகள் பற்றி சிந்தியுங்கள் என மக்கள் கூறுகிறார்கள். அதுமட்டும் தான் உங்களுக்குத் தேவை" உங்களுக்குப் பசியாக இருந்து நீங்கள் ஓர் உணவகத்திற்குச் சென்று உணவுக்கு ஆடர் கொடுக்கும்போது பரிசாரகன் வந்து "நீங்கள் உண்மையாகவே எதையும் உண்ணத் தேவையில்லை, நீங்கள் விரும்பும் மிகவும் விசேடமான உணவுகளைப் பற்றிச் சிந்தியுங்கள், அப்போது உங்கள் பசி போய்விடும்" எனக் கூறினால் பசி போய்விடுமா? இல்லை எதுவும் செயல்ரீதியில் இருக்கவேண்டும்.

நாங்கள் ஒவ்வொரு நாளும் அமைதியை உணரவேண்டும். அத்துடன் நாம் அமைதியை உணர விரும்பினால், நாம் எம் உள்ளே திரும்பலாம். எங்களுக்குக் காற்றுத் தேவை. அத்துடன் காற்று எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எங்களுக்கு அமைதி தேவை, அத்துடன் அமைதி எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எங்களுக்கு ஆனந்தம் தேவை, அத்துடன் ஆனந்தம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அமைதியும் ஆனந்தமும் மிகவும் வசதியான இடத்தில், எம்முள்ளேயே, நாம் எங்கு சென்றாலும், அவ்விடத்தில் அமைந்து உள்ளது.

# TRIDEL CONDO FOR SALE

## 181 VILLAGE GREEN SQ. (KENNEDY & HWY401)

**$ 638,000**





- 2 bedrooms + Den
- 1 Parking + 1 Locker
- 2 full baths
- 840 sq. ft.
- Corner unit

**PARA TISIKULASINGAM**
SALESPERSON
**(647) 296-0596**

**RAJA MAHENDRAN, Broker/Owner**
(416) 315-9397

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc., Brokerage*
O : 416-321-6969 F: 416-321-6963
*Each office independently owned and operated.